'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XV செப்டம்பர் கி.பி. 2024 சான்று : 177



## கடவுளின் வல்லமை

வட்டாரக் கூட்டங்கள்



சி.கே.மங்கலம்



கமுதி



செஞ்சை



இராமநாதபுரம்



செக்காலை



சிவகங்கை



பரமக்குடி



முத்துப்பேட்டை



காளையார்கோவில்



ம. மகிண்டிபட்டணம்

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் ஆகியவரையும் ஏன் தன் உயிரையுமே என்னை விட மேலாக கருதினால் அவர் என் சீடராய் இருக்க முடியாது என்று (லூக் 14:26) இயேசு ஆண்டவர் சீடத்துவத்தின் மையமான, முக்கியமான பரிமாணத்தை உறுதியாக கூறியிருக்கிறார். அதன்படி நானும் நீங்களும் வாழ்ந்து, அவரது உண்மைச் சீடராய் இருக்க ஜெபிக்கிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 15 மாதங்கள் பயிற்சி பெற்று நற்செய்தி பணியாளர்களாக இம்மாதம் 29ஆம் தேதி அர்ப்பணம் ஏற்க உள்ள அனைவருக்காகவும் செபிப்போம். அவர்கள் அனைவரும் கனிதரும் சீடராய் வாழ வாழ்த்துகிறேன், செபிக்கிறேன்.

உண்மையான சீடர் தினம்தோறும் கடவுளின் வார்த்தையை வாசித்து, சுவாசித்து, கற்றுக்கொண்டு, தியானித்து, வாழ்வாக்கி, அதற்குக் கீழ்படிந்து வாழ்பவர் ஆவார். உலக மதிப்பீடுகளை அல்ல, திருவிவிலிய மதிப்பீடுகளை கடைபிடித்து, இறை வார்த்தையின் அடிப்படையில், தூய ஆவியானவரின் வல்லமையினால், அவருடைய கனியால் வாழ முற்படுபவர். உலகில் உள்ள செல்வம், சொத்து, பதவி, தொழில், வணிகம், உறவுகள் அனைத்திற்கும் மேலாக கடவுளை நேசிப்பவர். அவரது இடத்தை வேறு யாருக்கும், வேறு எதற்கும் கொடுக்காதவர். நிபந்தனையற்ற முறையில் பிறரை நேசிப்பவர். கடவுளை நேசிக்கும் அதே நேரத்தில் மற்றவர்களையும் நிபந்தனையற்ற முறையில் அன்பு செய்கிறவர். அந்த அன்பு தான் அகாபே அன்பு. அகாபே அன்பு கொடுக்கும் அன்பு. பிரதிபலன் எதிர்பாரா அன்பு. மற்றவர்களின் நலனை நாடும் அன்பு. சுயநலமற்ற முறையில் மற்றவர்களின் நலம் நாடும் அன்பு. பகைவரையும் நேசிக்கும் அன்பு (உரோ 12:20,21). அந்த அன்பு தான் நம் ஒவ்வொருவரின் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.(உரோ 5:5). நீங்கள் என்னை காயப்படுத்தினீர்கள் . என் பெயரைக் கெடுத்தீர்கள். எனக்குத் தீமையை மட்டுமே செய்தீர்கள். என் உடைமைகளை பறித்தீர்கள். நானும் உங்களுக்கு அப்படி எதுவும் செய்யப் போவதில்லை. மாறாக உங்களுக்கு நன்மை செய்யப்போகிறேன். உங்களுக்கு ஆசி கூறப்போகிறேன். உங்களுக்காகச் செபிக்க போகிறேன் என்று நினைத்து செயல்படுவது தான் அகாபே அன்பு. என் மனைவி என்னை இப்படி அவமானப்படுத்தினார். என் கணவர் என்னை இப்படி அவமானப்படுத்தினார். ஆனால் நான் கடவுள் என்னை அன்பு செய்யும் விதமாக அன்பு செய்யப்போகிறேன் என்பது தான் அகாபே அன்பு. இதை நிச்சயமாக நம் சொந்த அன்பால் செய்யக் கூடியது அல்ல. கடவுளின் அன்பு நம்மை நிரப்புவதால் செய்யக்கூடியது. நான் கலந்து கொள்ளும் கூட்டங்களில் பல முறை இரண்டு வரிப் பாடலை தலை மீது கை வைத்து பாட பரிந்துரைத்திருக்கின்றேன்.' இயேசுவே உமது அன்பினால் என்னை நிரப்புமையா. எல்லோரையும் உமது அன்பினால் நேசிக்க உதவுமையா.'என்று உணர்ந்து, பாடி செபிக்கும் போது அவரது அன்பினால் நிரப்பப்படுகிறோம்.

சீடத்துவ அழைப்பு என்பது குருவின் கொள்கையை போதனைகளை பின்பற்றுவதற்கான அழைப்பு மட்டுமல்ல. அது மட்டும் நோக்கம் அல்ல. அது ஓர் உறவுக்கான அழைப்பு. இயேசு கிறிஸ்து ஆண்டவர் தன்னோடு நம்மை உறவு கொள்ள அழைத்தார்.(மாற் 3:14). நாம் ஒவ்வொருவரும் மனம் திரும்பி இயேசு கிறிஸ்துவிடம் தனிப்பட்ட உறவுக்குள், இணைப்பிற்குள் வருவதுதான் சீடத்துவத்தின் முதல் படிநிலை. கடவுளோடு நெருக்கமும், ஒன்றிப்பும், உயிரோட்டமான அன்பு றவும் சீடருக்கு மிக மிக அவசியம். இதற்கு வழி அமைப்பவை தான் இறைவேண்டல் ,இறை வார்த்தையை வாசித்து, சுவாசித்து, கற்றுக் கொண்டு, வாழ்வாக்கி, கீழ்ப்படிதல், தூய ஆவியாரின் குரலுக்கு உணர்வு உள்ளவர்களாய் இருத்தல் ஆகியவை ஆகும்.

தன்னலம் துறந்து நாள்தோறும் தன் சிலுவையை தூக்கிக் கொண்டு இயேசு கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும் (லூக் 14:27. லூக் 9:23.மாற் 8:34.மத் 16:24). நம் இதய சிம்மாசனத்திலே இயேசுவை அமர வைக்க வேண்டும். அவரை அமர வைக்க வேண்டும் என்றால் நம் இதய சிம்மாசனத்தில் இருந்து தன்னலத்தை. சுயத்தை இறக்கி வைக்க வேண்டும். தன்னலத்திற்கு. ஊனியல்புகளுக்கு. பாவத்திற்கு இறந்து இயேசு கிறிஸ்துவை இதய சிம்மாசனத்தில் ஏற்றி நம் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் இயேசு கிறிஸ்து ஆளுகை செய்ய இடம் கொடுத்து அவரைப் பின்பற்றுகிறவர் தான் உண்மை சீடர்.

தனிப்பட்ட வாழ்வில். குடும்ப வாழ்வில். பொருள்சார் வாழ்வில். பணி வாழ்வில். சமுதாய வாழ்வில் இப்படி எல்லா பகுதிகளிலும் இயேசு கிறிஸ்து ஆண்டவரின் ஆளுகைக்கு இடம் கொடுத்து வாழ அழைக்கப்பட்டவர் தான் உண்மைச் சீடர். தான் சீடராக மட்டும் வாழ்ந்தால் போதாது சீடர்களை உருவாக்க அழைக்கப்பட்டவர். ஒவ்வொரு சீடரின் இறுதி இலக்கு இயேசு கிறிஸ்துவை போல் மாறுவதாகும்(கலா 2:20). நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாட்சியை நீங்கள் அடையும் பொருட்டே நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக அவர் உங்களை அழைத்தார்(2தெச 2:14) என்று புனித பவுலடியார் எடுத்தியம்பியிருக்கிறார். ஆக இறுதி இலக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாட்சியை நாம் அடைவதே என்பது தெளிவாகிறது அல்லவா?.

தனது தேவைகளுக்காக கடவுளிடம் வரும் பக்தர்களை உருவாக்க கடவுள் நம்மை அழைக்கவில்லை. மீண்டும் மீண்டும் எழுதுவதால் சலிப்பு உண்டாகுமே என்ற கவலை எனக்கு இல்லை. எப்படியாவது சீடத்துவத்தின் மாட்சியை நாம் அனைவரும் உணர்ந்து வாழ வேண்டும் என்பதே எனது நோக்கம். கடவுள் நம்மை எதற்காக அழைத்தார்?. தன்னலம் துறந்து. தன் சிலுவை எடுத்துக்கொண்டு. தன் வாழ்வின் முதலிடத்தை இயேசு கிறிஸ்து ஆண்டவருக்குக்கொடுத்து அவரது அடிச்சுவடுகளில் நடக்கும் சீடராக தானும் உருவாகி. பிறரையும் உருவாக்கவே கடவுள் நம்மை அழைத்துள்ளார்(2தீமோ 2:2).

'சான்றாளர் பலர் முன்னிலையில் நீ என்னிடம் கேட்டவற்றை மற்றவர்கள் கற்பிக்கும் திறமை உள்ளவர்களும் நம்பிக்கைக்கு உரியவர்களுமாகிய மனிதரிடம் ஒப்படை'என்று அழகாக கூறியிருக்கிறார். இதற்கு என்ன பொருள்?. ஆழ்ந்து சிந்தியுங்கள். இயேசு ஆண்டவர் இறுதியில் விட்டுச் சென்ற கட்டளையாகிய சீடர்களை உருவாக்குங்கள்(மத் 28:18,19) என்ற கட்டளையின் பிரதிபலிப்பு தானே?. நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்று சீடர்களிடம் கட்டளை கொடுத்தார். நம்முடைய செயல்பாடு என்ன என்பதை ஆய்வு செய்து பார்ப்போம். இந்தப் பகுதியில் மையமான முக்கியமான வினைச்சொல் 'சீடர்களை உருவாக்குவதே' என்பதை புரிந்து கொள்வோம். அதற்கு முக்கிய நிபந்தனை நாம் உண்மைச் சீடராக வேண்டும். நாம் சீடராகி இருக்கிறோமா? என்பது மிகப் பெரிய கேள்வி. நாம் நற்செய்தியை உள்வாங்கி. அதை அனுபவித்து. அதை அறிவிப்பதோடு நமது பணி நிறைவடைவதில்லை. யாருக்கு அறிவிக்கிறோமோ அவர்களை கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சிக்கு வழி நடத்தி. அவர்கள் இறை வார்த்தைகளை கடைபிடிப்பவர்களாக மாறும் வரை நமது பணி தொடர வேண்டும். முதலில் நாம் அதில் வாழ்ந்திருக்க வேண்டும். கிறிஸ்துவை போல் சாயல் உள்ளவர்களாக நாம் மாறிக்கொண்டே பிறரையும் உருவாக்க வேண்டும். உருவாக்கும் பணி கடவுளுடையது என்றாலும் அவரது திருவுளப்படி நமது பணி அமைவது மிக மிக அவசியம். ஒரு நபரோ. குழுவோ. சபையோ சீடர்களை உருவாக்கத் தவறும் போது ஆண்டவருடைய கட்டளைகளை மீறுகின்றார்கள். நமது திரு அவை உண்மை சீடர்களை உருவாக்குகிறதா?. நம் நற்செய்திப் பணிக் குடும்பம் உண்மை சீடர்களை உருவாக்குகிறதா? வினா எழுப்புவோம். ஆய்வு செய்வோம். உண்மை சீடர்களாக உருவாகி. உருவாக்குவோம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

நற்பணி **அ. சகாயராஜா**

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 04.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8 பேரும் இரண்டாவது குழுவில் 6 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி. J. மேரிபுஷ்பம், நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி K. ஜஸ்டீன் கபிரியேல், நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. அடைக்கலம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 04.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 11 பேரும் இரண்டாவது குழுவில் 8 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி. V.செங்கோல் மேரி, நற்பணி M. லூயிஸ் ஜான்போஸ்கோ, நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 04.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 19 பேரும் இரண்டாவது குழுவில் 6 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி X. லூர்துமேரி, நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S.இராஜேந்திரன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 11.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 3 பேரும் இரண்டாவது குழுவில் 5 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - V ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 11.08.2024 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. சகாய தமிழ்செல்வி, நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VI சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 11.08.2024 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. சகாயமேரி, நற்பணி GMS ராணி, நற்பணி அருள் ஜீவா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி VII அமைதியகம், காயாவயலில் 18.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8 பேரும் இரண்டாவது குழுவில் 14 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை. Sr.பச்சைஜோதி, நற்பணி J. அருள் இளங்கோ நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி, நற்பணி S. சேசுராஜா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 18.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 9 பேரும் இரண்டாவது குழுவில் 10 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி நற்பணி A. சந்திரபுஷ்பா, நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி T.ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 25.08.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8

பேரும் இரண்டாவது குழுவில் 12 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S. தைனஸ்மேரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி S. பால்ராஜ், நற்பணி A. ஜான்சி மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X கமுதி, புனித அந்தோணியார் ஆலயத்தில் 25.08.2024அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி M. லூயிஸ் ஜான் போஸ்கோ, நற்பணி T.மிக்கேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## ஆகஸ்ட் 2024 கடந்த மாதச் செயல்பாடுகள்

• 03.8. 2024 அன்று இடைக்காட்டூர் இயேசுவின் திரு இருதய கோவிலில் பரிந்துரை செபம் நடைபெற்றது. இதில் காளையார்கோவில் வட்டாரத்தை சார்ந்த நற்பணி. செபஸ்தியம்மாள், நற்பணி சார்லஸ்மேரி நற்பணி அருளாயி, நற்பணி ரெஜினா மேரி ஆகியோர் பங்கேற்று செபித்தார்கள்.

• 06.08.2024 அன்று மூக்கையூர் அந்தோனியார் கோவிலில் முழு இரவுச் செபத்தை நற்பணி சேவியர், நற்பணி ஜோசப் சேவியர், நற்பணி சேவியர் ஆகியோர் வழிநடத்தினர்.

• 07.8. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை நடைபெற்றது. 34பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி அருள் இளங்கோ, நற்பணி அருள்மேரி, நற்பணி விக்டோரியா ராணி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

• 07.8. 2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை நடைபெற்றது. 74 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி மேரிபுஷ்பம், நற்பணி புஷ்பராஜ், நற்பணி சாந்தி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

• 11.8.2024 அன்று சாயல்குடி பங்கு மேல முந்தல் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் முத்துப்பேட்டை வட்டார நற்பணி சாந்தா, நற்பணி கலா, நற்பணி மார்க்கஸ், நற்பணி ததேயுஸ் ஆகியோர் பணியாற்றினார்கள்.

• 16,17&18.8.2024 அமைதியகத்தில் ஆண்டுத்தியானம்-II நடைபெற்றது. அருட்தந்தை குமார் ராஜா செய்தி வழங்கி வழிநடத்தினார்கள். 78 பணியாளர்கள் பங்கேற்றனர்.

• 23,24&25.8.2024 அமைதியகத்தில் ஆண்டுத்தியானம்-III நடைபெற்றது. அருட்தந்தை கிரேஸிஸ் மைக்கல் செய்தி வழங்கி வழிநடத்தினார்கள். 88 பணியாளர்கள் பங்கேற்றனர்.

• 25.8.2024 அன்று அஞ்சுக்கோட்டை பங்கு சின்ன அஞ்சுக்கோட்டைகிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் சி.கே. வட்டார பணியாளர்கள் நற்பணி. டேவிட் அந்தோனி, நற்பணி அந்தோணி வளவன் ஆகியோர் பணியாற்றினார்கள்.

• 25.8. 2024 அன்று இருதயபுரம் பங்கு பெரியார் நகர் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. சாலைக்கிராமம் வட்டார பணியாளர்கள் நான்கு வாரமும் பணியாற்றினார்கள். நற்பணி இராஜேந்திரன், நற்பணி ஆரோக்கியசாமி நற்பணி மோட்ச அலங்காரம், நற்பணி சகாயமேரி, நற்பணி ஆரோக்கிய மேரி, நற்பணி ஜோன்ஸ் மேரி பணியாற்றினார்கள்.

• 31.8.2024 அர்ப்பணவிழாத் தயாரிப்புக் கூட்டம் அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது.

**கமுதி வட்டாரம்**

கமுதி வட்டாரத் தியானக் கூட்டம் 04-08-2024 ஞாயிறன்று K.M. கோட்டை நற்பணி மரிய அருள்நாயகம் வீட்டில் காலை 10.30 மணிக்கு துவங்கியது. நற்பணி ஆரோக்கியமேரி தொடக்க வழிபாட்டை வழிநடத்தினார்கள். செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு பயனில நீக்கிப் பயனுள பேசுதல் என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்டுத்தினார்கள். 19 பணியாளர்கள் கலந்து கொண்ட தியானம் குழு ஆய்வு மற்றும் பரிந்துரை செபத்தோடு மாலை 3.30 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **மைக்கேல்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டாரத் தியானக் கூட்டம் 04-08-2024 அன்று நற்செய்திப் பணியாளர்கள் தர்மராஜ் முத்து ஜீலியானா இல்லத்தில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் கூட்டம் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி மரிய கிரகோரி கலந்துகொண்டு நற்செய்திப் பணியாளராகிய நான் பயனில நீக்கிப் பயனுள பேசுகிறேனா? என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவுக்குப் பின் குழுப் பகிர்வு நடைபெற்றது. அறிவிப்பு, மன்றாட்டு மற்றும் கொள்கைப் பாடலுடன் மாலை நான்கு மணிக்கு கூட்டம் நிறைவு பெற்றது. மொத்தம் 27 பேர் கலந்து கொண்டனர்.

நற்பணி **ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**செஞ்சை வட்டாரம்**

செஞ்சை வட்டாரத் தியானக் கூட்டம் 11.08.2024 ஞாயிறு அன்று செஞ்சை LFRC பள்ளியில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது. தொடக்க வழிபாட்டை நற்பணி செபாஸ்டின் தார்சிஸ், நற்பணி சோபியா சுந்தரி, நற்பணி ஆரோக்கிய தீபா ஆகியோர் இணைந்து நடத்தினர். தொடர்பாளராக செயலர் கலந்துகொண்டு நற்செய்திப் பணியாளராகிய நான் பயனில நீக்கிப் பயனுள பேசுகிறேனா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். செஞ்சை பங்குப்பணியாளர் அருள்பணி கிளமெண்ட் ராஜா அவர்கள் கலந்துகொண்டு நற்செய்திப் பணியாளர்களுக்கு ஊக்கஉரை ஆற்றினார். நண்பகல் உணவுக்குப்பின் குழு அமர்வு நடைபெற்றது. 31 பணியாளர்கள் கலந்து கொண்ட தியானம் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **விசுவாசம்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**சிவகங்கை வட்டாரம்**

சிவகங்கை வட்டார நற்செய்திப் பணியாளர்களின் வட்டாரத் தியானக் கூட்டம் 18-08-24 ஞாயிறு காலை 10:30 மணி அளவில் சிவகங்கை பங்கு செங்குளம் கிராமத்தில் நற்பணி ஜோசப் மார்ஷா அவரது இல்லத்தில் நடைபெற்றது. நற்பணி ஜீவா, நற்பணி ஜெயசீலன் ஆகியோர் இணைந்து தொடக்க வழிபாட்டை நடத்தினார்கள். நற்செய்திப் பணியாளராகிய நான் பயனில நீக்கி பயனுள பேசுகிறேனா? என்ற மைய சிந்தனையில் நற்பணி GMS. ராணி அவர்கள் தொடர்பாளராக கலந்து கொண்டு செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். கடந்த வட்டார தியானக் கூட்ட அறிக்கை கண்காணிப்பாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. மதிய உணவிற்குப் பின் பணியாளர்களின் பகிர்வு நடைபெற்றது. பின்னர் அறிவிப்பு மற்றும் மன்றாட்டுக்கள் ஏறெடுக்கப்பட்டன. இறுதியாக கொள்கை பாடலுடன் மாலை 4 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது. 24 பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நற்பணி **எல். ஜோசப் இருதயம்** வட்டார கண்காணிப்பாளர்

**சி.கே.மங்கலம் வட்டாரம்**

சிகே மங்கலம் வட்டாரத் தியானக் கூட்டம் 4.8.2024. ஞாயிறு காலை 10:30 மணியளவில் நற்பணி வின்செண்ட், நற்பணி சகாய தமிழ்ச்செல்வி ஆகியோர் இல்லத்தில் வட்டாரப்பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் துவங்கியது. தொடர்பாளராக அருள்சகோதரி ஜோஸ்பின் பச்சை ஜோதி அவர்கள் கலந்துகொண்டு, நற்செய்திப் பணியாளராகிய நான் பயனில நீக்கி பயனுள்ள பேசிகின்றேனா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். மதிய உணவுக்கு பின் குழுப்பகிர்வு நடைபெற்றது. 33 பணியாளர்கள் கலந்து கொண்டனர். அறிவிப்பு பரிந்துரை செபம் மற்றும் கொள்கைப் பாடலுடன் மாலை 4 மணிக்கு வட்டார தியானக் கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி **டேவிட்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**சாலைக்கிராமம் வட்டாரம்**

சாலைக்கிராமம் வட்டாரத் தியானக் கூட்டம் 18.08.2024 அன்று இளையாங்குடி சகாயமாதா கோவிலில் ஞாயிறன்று 10.30 மணிக்கு தொடங்கியது. பிரசன்ன செபம் நற்பணி இராஜேந்திரன் அவர்களும். இறைபுகழ் நற்பணி ஜாக்குலின் அவர்களும் பாவமன்னிப்பு நற்பணி அருள்ஜோதி அவர்களும் ஆவியார் செபம் நற்பணி ஜோன்ஸ் மேரி அவர்களும் நடத்தினார்கள். தொடர்பாளராக நற்பணி தனிநாயகம் கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் பயனில நீக்கி பயனுள பேசுகிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள். நண்பகல் உணவிற்குப் பின் குழு ஆய்வு. அறிவிப்பு மற்றும் கொள்கைப்பாடலுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது கலந்துகொண்ட பணியாளர்கள் 25 நபர்கள்.

நற்பணி **ஜோன்ஸ் மேரி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**காளையார்கோவில் வட்டாரம்**

காளையார்கோவில் வட்டாரத் தியானக் கூட்டம் 11.08.2024 அன்று காலை 10.30 மணிக்கு காளையார்கோவில் புனித அருளானந்தர் கோவிலில் வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி அ. தனிநாயகம் அவர்கள் கலந்துகொண்டு பணியாளராகிய நான். பயனில்லாததை நீக்கி. பயனுள்ளதை பேசுகிறேனா? தலைப்பில். இறைவார்த்தையின் பின்புலத்தில் இறைச்செய்தி வழங்கினார்கள். 17 பணியாளர்கள் கலந்துகொண்டனர். இறுதி செபத்துடன். கொள்கைப் பாடல் பாடித் தியானக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நற்பணி **வே.செங்கோல் மேரி ,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**பரமக்குடி வட்டாரம்**

பரமக்குடி வட்டாரத் தியானக் கூட்டம் 11.08.2024 ஞாயிறு அன்று தினைக்குளத்தில் புனித அந்தோணியார் கோவிலிலல் நடைபெற்றது. தொடக்க வழிபாட்டை நற்பணி ஸ்டெல்லா மேரி. நற்பணி விமல் சீமோன். நற்பணி ஜோசப் அமல்ராஜ் ஆகியோர் இணைந்து வழிநடத்தினர். வட்டார தியானக் கூட்டத்தின் தொடர்பாளராக நற்செய்தி பணியாளர்களின் ஒருங்கிணைப்பாளர் நற்பணி சகாயராஜா அவர்கள் கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் பயனில நீக்கி பயனுள பேசுகிறேனா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கினார்கள். மதிய உணவிற்குப்பின் குழு அமர்வு நடைபெற்றது. அறிவிப்புக்கள். பரிந்துரை செபம் மற்றும் கொள்கைப்பாடலுடன் மாலை 4 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது. 45 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நற்பணி **ஜஸ்டின் கபிரியேல்,** வட்டார கண்காணிப்பாளர்

**இராமநாதபுரம் வட்டாரம்**

இராமநாதபுரம் வட்டாரத் தியானக் கூட்டம் 25.08.2024 ஞாயிற்றுகிழமை தேவிபட்டணம் நற்பணி சவரி மாலினி அவர்கள் இல்லத்தில் காலை 11.00 மணியளவில் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு பயனில நீக்கி பயனுள பேசு என்ற மைய சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். 22 பணியாளர்கள் பங்கேற்ற தியானம் குழு ஆய்வு மற்றும் இறுதி செபத்துடன் மாலை 4.30 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **தனிநாயகம்,** வட்டார கண்காணிப்பாளர்

**முத்துப்பேட்டை வட்டாரம்**

முத்துப்பேட்டை வட்டாரத் தியானக் கூட்டம் 25.08.2024 அன்று காலை 10.30 மணியளவில் நற்பணி பிரான்சிஸ் மார்க்ஸ். நற்பணி மரிய வெர்ஜினா இல்லத்தில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க செபத்துடன் ஆரம்பமானது. தொடர்பாளராக நற்பணி M. மரியகிரகோரி நற்செய்திப் பணிளாராகிய நான் பயனில நீக்கி பயனுள பேசுகிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். நண்பகல் உணவுக்குப்பின் 3 குழுக்களாக பிரிந்து கொடுக்கப்பட்ட வினாவின் அடிப்படையில் கலந்துரையாடல் செய்து தங்களது பகிர்வு கருத்துக்களை வெளிப்படுத்தினர். அறிவிப்பு மற்றும் நன்றி செபத்துடன் கொள்கைப்பாடல் பாடி கூட்டம் மாலை 4.30 மணிக்கு நிறைவுபெற்றது. 24 பணியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நற்பணி **V.S. ததேயுஸ் கிளாரே,** வட்டார கண்காணிப்பாளர்

## நீ மனிதருக்கு ஏற்றவைப் பற்றியே எண்ணுகிறாய் (மத் 16:23)

நம் ஆண்டவர் பேதுருவைப் பார்த்து நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவைப் பற்றியே எண்ணுகிறாய் என்றார். நமது மனதில் எப்போதுமே இரண்டு வகையான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருப்பதை நாம் உணர முடியம். அதில் பெரும்பாலானவை இவ்வுலகத்துக்கு உரியவையாகவே உள்ளன. எனவேதான் ஆண்டவர் நீ மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய் என்றார். ஏன் இவ்வாறு பேதுருவிடம் கேட்டார்? மீட்பின் மகிழ்ச்சியைப் பெறாதவர்களின் எண்ணங்கள்தான் எப்போதும் எதைச் செய்தாலும் இதில் நமக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்று உலகத்துக்குரியவைகளின் மீதே எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை. நன்றி செலுத்தவுமில்லை. அதற்கு மாறாக அவர்கள் எண்ணங்கள் பயனற்றவாயின. உணர்வற்ற அவர்கள் உள்ளம் இருண்டு போயிற்று. எப்போதும் உலகத்துக்குரியவைகளையே எண்ணிக் கொண்டிருப்பவர்களுடைய எண்ணங்கள் இருளடைந்து போய்விடும் என்று பவுல் குறிப்பிடுகிறார். (உரோ 1:21) மனித இயல்பை மட்டும் உடைய ஒருவர் கடவுளின் ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்வதில்லை. அவை அவருக்கு மடமையாய்த் தோன்றும். அவற்றை அவரால் புரிந்து கொள்ளவும் முடியாது (1 கொரி 2:14). கடவுளை அறிந்து மீட்பின் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொண்டவர்களும் சில நேரங்களில் இந்த மனிதருக்குரியவற்றின் மீது தங்கள் எண்ணங்களை விட்டு விடுகிறார்கள். இதை சீடர்களின் வாழ்க்கையில் அவ்வப்போது நாம் பார்க்கிறோம். ஒரு முறை ஆண்டவர் சமாரியருடைய ஓர் ஊருக்குப் போயிருந்தபோது அவர் எருசலேமுக்கு செல்லும் நோக்கமாய் இருந்ததால் அவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே சீடர்கள் கோபம் கொண்டு வானத்திலிருந்து நீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா? என்று கேட்டார்கள்.. எப்படி மனிதரையும் மீட்க வந்தவரிடமே அவர்களை அழிக்கட்டுமா என்று கேட்கின்றனர். மனிதருக்குரிய எண்ணங்கள் சில நேரங்களில் அவ்வாறு உள்ளதைக் கண்ட ஆண்டவர் அவர்களை கடிந்து கொள்கிறார் (லூக் 9:51-55). செபதேயுவின் மனைவி தனது இரு மகன்களுடன் வந்து நீர் ஆட்சிபுரியும் போது என் மக்களாகிய இவர்கள் ஒருவர் உம் வலப்புறத்திலும் ஒருவர் இடப்புறத்திலும் அமரச் செய்யும் என்று வேண்டினர். இந்த எண்ணம் சீடர்களுக்குக் கோபத்தையும் பொறாமையையும் தூண்டியது. உடனே அவர்களை ஆண்டவர் அருகில் அழைத்து கடவுளை அறியாத பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். ஆனால் நீங்கள் எத்தகைய பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை மிகவும் பக்குவமாக எடுத்துக்கூறி உங்களிடையே அத்தகைய எண்ணங்கள் கூடாது என்று எடுத்துக் கூறுகிறார் (மத் 20:20-28). அதுபோல ஆண்டவர் எருசலேமுக்குப் போய் எவ்வாறு துன்பப்பட வேண்டும் என்பதை கேட்டபோது பேதுருவால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அதை அநீதியாகவே கருதினார். தனது ஆண்டவருக்கு அப்படி ஒன்றும் நேரிடக்கூடாது. தனது குருவின் மீது எவ்வளவு பக்தி! எவ்வளவு பரிவு. அக்கறை ஆண்டவர் பேதுருவைப் பாராட்டியிருக்க வேண்டுமே. மாறாக, எனக்குப் முன்னால் நிற்காதே என்னை விட்டு அகற்றுபோ என்று கடுமையாக கடிந்துரைக்கிறார் (மத் 16:22-23). மனித எண்ணங்கள் கடவுளின் எண்ணங்களுக்கு எவ்வளவு மாறுபட்டவை என்பதைத்

தான் இந்நிகழ்ச்சி நமக்கு எடுத்துக் காட்டுகிறது. மண்ணுலகிலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன என்கிறார். (எசா 55:9) சற்று முன்புதான் மற்ற சீடர்களுக்கு முன்பாக நீ பேறு பெற்றவன் என்ற மிகப் பெரிய பாராட்டைப் பெற்றார். தான் யார் என்ற கேள்விக்கு மனித எண்ணங்களின்படி பதில் கூறாமல் விண்ணகத் தந்தை அவருக்கு வெளிப்படுத்தியதை எல்லார் முன்பும் வெளிப்படையாக அறிவித்தார். இது ஆண்டவருக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. உடனே பேதுருவைப் பார்த்து மிகப் பெரிய ஆசிரை வாக்குறுதியாக அவருக்குக் கொடுத்தார் (மத் 16:18-25).

அதே வேளையில் சிலுவைப்பாடுகளை எடுத்துக் கூறியபோது முன்பு எல்லார் முன்பும் நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் என்று வெளிப்படையாக அறிக்கை செய்தவர். இப்போது சாத்தானின் தூண்டுதலுக்கு உள்ளத்தில் இடம் கொடுத்ததால் ஆண்டவரைத் தனியாக அழைத்துக் கடிந்து கொண்டு ஆண்டவரே இது உமக்கு வேண்டாம் உமக்கு இப்படி நடக்கக் கூடாது என்றார். அதனால் ஆண்டவரின் கடிந்து கொள்ளுதலுக்கு ஆளானார். ஆண்டவர் பேதுருவை கடிந்து கொண்டது அவர் மீது கொண்டிருந்த அன்பினால்தான். ஏனெனில் வெளிப்படுத்தப்படாத அன்பைவிட குற்றத்தை வெளிப்படையாக கண்டிக்கும் கடிந்துரையேமேல். நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை (நீதி 27:5-6). ஆண்டவர் சீடர்களோடு இருந்து அவ்வப்போது அவர்களை கடிந்து கொண்டு நல்வழிபடுத்தியதுபோல இன்றைக்கும் அதே இடத்தில் தந்தையிடமிருந்து அவர் பெற்றுத் தந்த தூய ஆவியானவர் நம்முடன் இருக்கிறார். நீங்கள் வலப்பறமோ இடப்புறமோ எப்பக்கம் சென்றாலும் இதுதான் வழி. இதில் நடந்து செல்லுங்கள் என்னும் வார்த்தை பின்னிருந்து உங்கள் செவிகளில் ஒலிக்கும். (எசா 30:21). கடவுளுக்கேற்ற எண்ணங்கள் எத்தகையதாய் உள்ளது? அது தங்களின் ஊனியல்பை அதன் இச்சைகளோடும் இழிவுணர்ச்சிகளோடும் சேர்த்து சிலுவையில் அறைவதையே இலக்காகக் கொண்டுள்ளது (கலா 5:24). அது தான் கிறிஸ்துவின் மனநிலை. எனவேதான் கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் என்று புனித பவுல் வலியுறுத்துகிறார். அது எத்தகைய மனநிலை என்பதை பின்னர் விளக்குகிறார். கடவுள் வடிவில் விளங்கிய அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தம்மையேத் தாழ்த்திக் கொண்டார் (பிலி 2:5-8). நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார் அவருடைய ஏழ்மையனால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார் (2 கொரி 8:9). புனித பவுலின் காலத்திலும் இத்தகைய மனநிலையில் இருந்தவர்களைப் பார்த்து சகோதர சகோதரிகளே ஆவக்குரியவர்களிடம் பேசுவது போன்று நான் உங்களிடம் பேச முடியவில்லை. கிறிஸ்துவோடு உள்ள உறவில் குழந்தைகள் போல் இப்போதும் அதே மனநிலையில்தான் இருக்கிறீர்கள். பொறாமையும் சண்டை சச்சரவும் உங்களிடையே உள்ளன. நீங்கள் மனிதப் போக்கில் தானே வாழ்கிறீர்கள் என்று தன்னுடன் இருக்கும் பணியாளர்களின் மனநிலையைக் கண்டு கடிந்து கொள்கிறார் (1 கொரி 3:1-4). நம் எண்ணங்கள் எப்போதும் கடவுளுக்கு ஏற்றவையாக இருக்க அவர் நமக்கு ஒரு அருமையானன ஆலோசனையைத் தருகிறார். நம்முடைய அன்றாட சாதாரண உரையாடல்களில் கூட திருப்பாடல்கள், புகழ்ப்பாக்கள் ஆவிக்குரிய பாடல்கள் இடம் பெறட்டும் என்கிறார் (எபே 5:19). இறுதியாக அவர் கூறுவது உண்மையானவை எவையோ

கண்ணியமானவை எவையோ நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ அவற்றையே மனத்தில் இறுத்துங்கள் என்கிறார் (பிலி 4:8-9). இவ்வாறு செய்யும்போது நம் எண்ணங்கள் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடையும் அப்போது கடவுளின் திருவுளம் எது எனப் புரியும் எது நல்லது எது உகந்தது எது நிறைவானது என்பதும் நமக்கு மிகத் தெளிவாய் புலப்படும் (உரோ 12:1-2).

நற்பணி **ஆ.விசுவாசம்,** செஞ்சை.

## இது சாத்தியமா ?

சிறு பிள்ளைகள் இருட்டைப் பார்த்து பயப்படுவதைப் பார்த்திருக்கிறோம். இருட்டு என்றாலே பேய் என்ற பயம் அவர்களுக்கு.

ஆறு வயதுக் குழந்தை பள்ளியிலே ஒருநாள் மாலை நேரத்தில் அழுதுகொண்டிருந்தாள். நான் அருகே சென்று கனிவுடன் கேட்டேன். 'ஏனம்மா அழுகிறாய்' என்று 'தாத்தா இறந்துவிட்டார்' என்றாள் சிறுமி. தாத்தா மேல் எவ்வளவு பாசம் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்த மறுநொடியே பக்கத்தில் இருந்த சிறுமி குறுக்கிட்டாள். தாத்தா இறந்ததால் பேயாக மாறி வருவாராம்.

பேய் சாத்தான் எனச் சமூகம் எந்த அறவிற்கு பிஞ்சு உள்ளங்களை பாழ்படுத்தியிருக்கிறது பயமுறுத்தி வைத்திருக்கிறது.

நினைவில் நிறுத்த வேண்டிய இரண்டு கூற்றுகள்:

1. கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார். ஆனால் சாத்தான் எங்கும் வியாபித்திக்கிறான் என்று சொல்ல முடியாது (யோபு 1:17).
2. சாத்தான் பல் பிடுங்கிப்பட்ட பாம்பு. சாத்தானால் என்னை ஒன்றும் செய்ய முடியாது.

அலகையை எதிர்த்து நிற்க. அது நம்மிடமிருந்து ஓடிப்போவது (யாக் 4:7) சாத்தியம்தானே!

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் கால்களில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்" (எபே 6:15).

நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகள் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். ஆயத்த நிலை என்பது நம்மையே நாம் தயார் நிலையில் வைத்துக் கொள்வது. ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்பவர்கள் வரிசையிலிருப்பதைப் பார்த்திருப்போம். நம்மில் பலர் அதுபோன்ற நிகழ்வைக் கடந்து வந்திருப்போம். நடத்துபவர்களின் விசில் சத்தம் கேட்டவுடன் ஓடுவதற்கு எவ்வளவு தயார் நிலையில் கவனமுடன் இருப்பார்கள். அப்படிப்பட்ட தயார் நிலையில் விழிப்புணர்வுடன் இருப்பதுதான் ஆயத்த நிலை.

நம்முடைய உள்ளார்ந்த செயல்பாடுகளில் நாம் செலுத்தும் கவனம் தான் உண்மையான ஆயத்த நிலை. நற்செய்தி அறிவிக்கிறவர்கள் கிறிஸ்து இயேசுவின்

மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். இதைத்தான் புனித பவுல் "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்"(பிலி 2:5) என்று கூறினார். கிறிஸ்து இயேசு இறையரசு பற்றிய நற்செய்தியை எப்படிப்பட்ட மனநிலையோடு அறிவித்தாரோ அத்தகைய மனநிலை நமக்கும் இருக்க வேண்டும்.

திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார் (மத் 9:36; மத் 24:14) என்றும் நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவு கொள்கிறேன். ஏற்கனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள் (மத் 15:32). என்று கூறுகிறார். பரிவு கொண்டு நற்செய்தியைப் பறைசாற்றினார். நோயுற்றோரைக் குணமாக்கினார். பசியோடு இருந்தவர்களுக்கு உணவு கொடுத்தார். பரிவு என்ற சொல்லுக்கு உடன் துன்புறுதல் என்ற மிக அழகான பொருள் உண்டு. இயேசு ஆண்டவர் மக்களின் நிலையைப் பார்த்து உடன் துன்புறுகிறவராக இருந்தார். அப்படி யென்றால் மற்றவர்களுடைய துன்ப துயரங்களைத் தன் துன்பமாகக் கருதி விடுதலை வழங்கினார். "அவர்கள் ஆயனில்லா ஆடுகளைப் போல் அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்" (மத் 9:36) மக்கள் ஆயனில்லா ஆடுகளைப் போல் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டதைக் கண்ட நம் ஆண்டவர் இயேசு அவர்கள் மீது பரிவு கொண்டார்.

இதனை வள்ளுவர் "பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றாக்கடை" என்று கூறுகிறார். அதாவது மற்ற உயிர்களின் துன்பத்தைத் தம் துன்பம் போல எண்ணாதவர்களிடத்தில் இருக்கும் அறிவினால் அவர்களுக்கு ஏதாவது பயன் உண்டா? என்று கேட்கிறார். மற்றவர்களின் தேவைகளை, துன்ப துயரங்களை, பாவ வாழ்க்கையைக் கண்டும் காணாதது போல் கடந்து செல்கிறவர்கள் உண்மையான நற்செய்தி பணியாளர் அல்ல. எந்த இடத்தில் பிறர் துன்பத்தைக் காண்கின்றோமோ அந்த இடத்தில் நின்று அவர்களின் தேவைகளை உற்றுக் கவனித்துக் கேட்டு விடுதலையைக் கொடுக்கிறவர்களே உண்மையான நற்செய்திப் பணியாளர்.

இயேசு எரிகோவை விட்டு வெளியே சென்ற போது திரளான மக்களும் உடன் வந்தனர். திரளான மக்கள் வரும்போது எவ்வளவு சத்தமும் சந்தடியும் இருக்கும். அதையும் தாண்டி பர்த்திமேயு என்ற பார்வையற்ற சகோதரன் "இயேசுவே தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" (மாற் 10:47) என்று கத்தத் தொடங்குகிறார். திரளான சத்தத்தின் மத்தியிலும் அவரின் கூக்குரலை இயேசு ஆண்டவர் உற்றுக் கவனிக்கிறார். உடனே "இயேசு நின்று அவனைக் கூப்பிடுங்கள் என்று கூறினார்" (மாற் 10:49) துள்ளிக்குதித்து வந்தவருக்குப் பார்வை கிடைத்தது. அது போலவே உலக சந்தடிகள் மத்தியில் வாழும் நாம் ஆன்ம அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற சகோதர சகோதரிகளைக் காணும் போது கண்டும் காணாமல் சென்று விடாமல் நின்று அவர்களைக் கவனித்து இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வருவதற்கு நமக்கு இயேசுவிடம் இருந்த பரிவு என்னும் ஆவியாரின் கனி வேண்டும்.

உண்மையான பரிவு இருந்தால்தான் இயேசு விரும்புகிற வகையில் அவர் வழியில் விடுதலைப் பணி செய்ய முடியும். உண்மையான பரிவு இல்லாமல் செய்யும் பணிகள் எல்லாம் சொந்த பெருமைக்கும் புகழுக்கும் பணி செய்வதாக காட்டிக் கொள்ளும் வெற்றுச் செயல்களே. நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையில் கிறிஸ்து இயேசுவிடம் விளங்கிய பரிவு என்னும் பண்பு மிக முக்கியமானதாகும். கிறிஸ்து இயேசுவின் மனநிலையில் பரிவு என்ற பண்பை மிதியடிகளாக அணிந்து கொள்ள தூய ஆவியானவரின் கனியான பரிவை அவர் நமக்குத் தர வேண்டும் என்று செபிப்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

சிவகங்கை மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு நடத்திய 15 மாத சீடத்துவப் பயிற்சியை நிறைவு செய்த பொதுநிலையினர்

**அர்ப்பண ஏற்பு விழா**

அ ர் ப் ப ண வி ழா

நாள்&நேரம்: 29.09.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 08.30 மணி
இடம்: குழந்தை இயேசு கோவில், தங்கச்சிமடம், ஆசையப்பர் பட்டணம்

தலைமை : **மேதகு முனைவர் லூர்து ஆனந்தம்**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

முன்னிலை: **அருள்பணி அ. சிங்கராயர்**
பங்குப்பணியாளர் & வட்டார அதிபர், இராமநாதபுரம்
**அருள்பணி ச. செபஸ்டின்**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர், சிவகங்கை

அர்ப்பணம் ஏற்க உள்ளோர் செப்டம்பர் 27 & 28 ஆகிய நாள்களில் பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் நடைபெறும் **தெளிந்து தேர்தல்** தியானத்தில் தவிர்ப்பின்றி பங்கேற்ற வேண்டும். பங்கேற்காதோர் அர்ப்பணம் ஏற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## 2024 ஆண்டுத் தியானம் — 2024

| | நாள் | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 13,14 & 15 செப். 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி M. சேவியர் நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 2. | 20,21 & 22 செப். 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. கிரேஸிஸ் மைக்கல் இறைஇரக்க தியான இல்லம் மாங்களரி | நற்பணி J. ஆரோக்கியசாமி நற்பணி A. சத்தியேந்திரன் |
| 3. | 18,19 & 20 அக். 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி I. புஷ்பராஜ் நற்பணி V. செங்கோல்மேரி |
| 4. | 25,26 & 27 அக். 2023 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி L. ஜோசப் இருதயம் நற்பணி S. இரஜேந்திரன் |
| 5. | 08,09 & 10 நவ. 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. மைக்கேல் மகிழன் Fr. மைக்கேல் மகிழன் | நற்பணி A. பெமிலா ஸ்டீபன் நற்பணி S. தைனஸ்மேரி |

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



நாங்கள் இருந்தாலும், இறந்தாலும் உம்மோடு இணைந்து வாழும் வண்ணம் எங்கள் பொருட்டு இறந்தவரே இறைவா! (1தெச 5:10).
நாங்கள் கற்றுக் கொண்டதற்கு ஏற்ப உம்மோடு இணைந்து வாழ எங்களை அழைத்திருக்கிறீர் (1யோ 2:27). உம்மோடு இணைந்து ஒவ்வொருவரும் முதிர்ச்சி நிலை பெற வேண்டும் என்றும் (கொலோ 1:28) நீர் தரும் வலிமையாலும் ஆற்றலாலும் வலுவூட்டப் பெற வேண்டும் என்றும் (எபே 6:10), நீர் தோன்றும்போது நாங்கள் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கவும், உம்முடைய வருகையின் போது வெட்கி விலகாது இருக்கவும் (1யோ 2:28) உம்மோடு இணைந்து வாழ ஆற்றல் தர வேண்டும் என்றும் இறைவா! உம்மை மன்றாடுகிறேன்.

முற்காலத்தில் இஸ்ரயேல் மக்கள்படும் துன்பத்தைக் கண்டும் அவர்களின் அழுகுரலைக் கேட்டும் மோசே மூலம் அவர்களைப் பார்வோனிடமிருந்து மீட்டு, பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அழைத்துச் செல்ல ஆண்டவர் இறங்கி வந்தார் (விப3:7). இரவில் நெருப்புத் தூணாகவும் பகலில் மேகத்தூணாகவும் இருந்து, அவர்களைப் பாதுகாத்து, பராமரித்து காத்து வந்தார் (விப 13:21). அந்நாளில், எகிப்திலிருந்து மோசேயோடு புறப்பட்டு பாலைநிலத்தில் வழிநடந்த இஸ்ரயேல் மக்களின் எண்ணிக்கை சுமார் 20 லட்சத்திலிருந்து 30 லட்சம் வரை இருந்திருக்கலாம் என்று விவிலிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு யூகத்தின் அடிப்படையில் ஒரு இராணுவ அதிகாரி கீழ்க்கண்ட புள்ளி விவரங்களைக் கூறுகிறார். இஸ்ரயேல் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1500 டன் அளவு உணவு தேவைப்பட்டிருக்கலாம். இதன் அளவு 2 மைல் தூரமுள்ள ஒரு புகைவண்டியின் கொள்ளளவுக்குச் சமமானது. அந்த உணவைச் சமைப்பதற்கு 4000 டன் விறகு தேவைப்பட்டிருக்கலாம். குளிப்பதை தவிர்த்து, குடிப்பதற்கும் பாத்திரம் கழுவுவதற்கும் மட்டுமே 11,00,000 காலன்கள் தண்ணீர் தேவைப்பட்டிருக்கலாம். அதாவது, 1800 மைல் நீளமுள்ள தண்ணீர் பீப்பாய்கள் உள்ள புகைவண்டியின் கொள்ளளவாக இருக்கலாம். மேலும், வியப்பூட்டும் தகவல் என்னவென்றால், இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடப்பதற்கு 2 வரிசையாக சென்றிருந்தால், அதன் நீளம் 800 மைலாகவும், அதனைக் கடப்பதற்கு 35 நாட்களும் ஆகியிருக்கலாம். மாறாக, 5000 வரிசையாக சென்றிருந்தால் 3 கிலோ மீட்டர் அகலமுள்ள பாதையில் ஓரிரவில் கடந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களோடு இருந்து அவர்களை நடத்திச் சென்ற விதங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபொழுது நாம் ஆண்டவரிடம் கொள்ளும் நம்பிக்கை அதிகரிக்கும்.

> "என் வாழ்நாள் எல்லாம்
> உம் அருள் நலமும் பேரன்பும்
> என்னைப் புடை சூழ்ந்து வரும்".
> திபா 23:6

இரத்த வெறிகொண்ட சவுல் அரசரும் மற்ற எதிரிகளும், தாவீதைக் கொல்வதற்கு பல வழிகளில் தொடர்ந்து வகைத்தேடிக் கொண்டிருந்தார்கள். இவர்களைவிட அதிகமாகவும் நெருக்கமாகவும் கூடவே இருந்து படைகளின் ஆண்டவர் தன்னைப் புடைசூழ்ந்து பாதுகாக்கின்றார் என்பதை தாவீது உறுதியாய் நம்பியிருந்ததால்தான் உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்து வரும் (திபா 23:6) என்று பாடுகிறார்.

நம் வாழ்க்கைப் பயணத்தில் போராட்டங்களும் நெருக்கடிகளும் நம்மைப் பின் தொடர்கின்றன என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையாகவே நம்முடைய வாழ்வில் இறை அருளும் பேரன்பும்தான் நம்மைப் பின் தொடர்கின்றன என்பதை பல வேளைகளில் மறந்து விடுகிறோம். எத்தனை பெரிய பிரச்சினைகள் வந்தாலும் அத்தனையையும் எதிர்கொள்ளக் கூடிய 'யா..வே சம்மா' கூடவே இருக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது. இப்பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஆண்டவரின் அருள் நலமும் பேரன்பும் உண்டு என்பது மட்டுமல்ல அதற்கு பிறகும் விண்ணக நிலைவாழ்வையும் ஆண்டவர் அருள்வார் என்பதை

தாவீது உறுதியாய் நம்பியிருந்ததால். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன் என்று பாடுகிறார்.

ஆகவே, கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டுமே சார்ந்திருந்தால் அது பயனற்றதாய் போய்விடும். நாமும் பரிதாபத்திற்குரியவர்களாய் இருப்போம். நம் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனித கையால் கட்டப்படாதது. நிலையானது என்பது நமக்கு தெரியும் அல்லவா. ஆகவே. நமக்கு கொடுக்கப்பட்ட இந்த மண்ணக வாழ்வு தற்கால குடியிருப்பே! நமக்கோ விண்ணகமே தாய்நாடு. அங்கிருந்துதான் மீட்பராம் இயேசுகிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம் (பிலி 3:20). ஆகையால்தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 'உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருப்பீர்கள்' (யோவா 14:3) என்கிறார்.

"நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருப்பீர்கள்'. யோவா 14:3

ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை என்று தாவீது கூறுவது இப்பூமிக்குரிய வாழ்வுக்காக மட்டுமல்ல. காணாமல் போன ஆடுகளாகிய நம்மைத் தேடிப் பூமிக்கு வந்த ஆண்டவர் நமக்காகத் தம்முடைய உயிரையும் கொடுத்தார். நம்முடைய பாவத்தின் சம்பளமான மரணத்தை அவர்தம் உடலில் ஏற்று நமக்கு நிலைவாழ்வை அருளினார். நாம் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்வதற்காகவே இப்படிச் செய்தார். ஆகவே. கடவுள் நம்மை விலைகொடுத்து மீட்டுள்ளார். நம் ஒவ்வொருவரின் உடலும் தூய ஆவியார் தங்கும் கோவில். ஆகவே. நம் உடலாகிய ஆலயத்தில் குடிகொண்டு கூடவே இருக்கும் கடவுளுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

ஆரா என்ற அமெரிக்கர், ஆப்பிரிக்கா கண்டத்திற்கு பணிசெய்ய சென்றார். ஒரு குறிப்பிட்ட கிராமங்களின் தலைவரிடம் சென்று. அங்குள்ள மக்களைச் சந்திக்க அனுமதி கோரினார். தலைவரும் அதற்கு அனுமதி வழங்கி பட்டயம் ஒன்றையும் கொடுத்து அவர் செல்லும் இடங்களில் எல்லாம் அதைக் கையில் வைத்துக் கொள்ளச் சொன்னார். இந்த இறைபணியாளர் செல்லும் இடங்களில் எல்லோரும் இவரை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். இதைக் கண்டு பிரமித்துப் போன ஆரா. தன் வழிகாட்டியிடம் நான் ஒரு அமெரிக்கர் என்பதால் இப்படி பணிகிறார்களா? எனக் கேட்டார். அதற்கு வழிகாட்டி 'ஐயா! இவர்கள் உங்களைக் கண்டு பணியவில்லை. உங்கள் கையிலுள்ள எங்கள் தலைவருடைய பட்டயத்தைக் கண்டு வணங்குகிறார்கள்' என்றான். இதுபோல. கடவுள் நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். அவர் நம்மோடு இருப்பதே நமக்கு மேன்மை.

பெற்றோர் நம்மை விட்டு விலகி இருக்கலாம். பெற்ற பிள்ளைகள் நம்மை விட்டு பிரிந்திருக்கலாம். நண்பர்கள் நம்மை விட்டு நழுவியிருக்கலாம். உறவினர்கள் ஒதுங்கியிருக்கலாம். நாம் எந்த நிலையிலிருந்தாலும் நம்மைவிட்டு விலகாதவர். வெறுக்காதவர், உடன் இருந்து காக்கின்றவர் நம் ஆண்டவர். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதற்கு எபிரேய மொழியில் 'யா..வே சம்மா' 'என்று சொல்லப்படுகிறது. 'யா..வே சம்மா' நம்மோடு இருப்பதால் நமக்கு குறையேதும் இல்லை என்று நம்புவோம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# சட்டி சட்டிதான்
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)



“இந்த அநியாயம் எங்காவது நடக்குமா? நல்ல பாரம்பரியம் மிக்க குடும்பம். சொந்த வீடு. சொந்த படகு. பாசமான நல்ல மாமனார். மாமியார். வாழ்விலும். தொழிலிலும் துணைநிற்கும் கொழுந்தன் இருக்கிறார்கள் என்று நினைத்தேனே! சரியான உழைப்பாளி என்று பார்த்துப் பார்த்துப் பொண்ண கொடுத்தேனே! யாரோ இயேசு என்று ஒருத்தர் வந்தாராம் என் மருமகனைப் பார்த்தராம் என் பின்னால வா ன்னு சொன்னாராம். உடனே தாய் தகப்பனை அப்படியே விட்டுட்டு. தொழிலை அம்போன்னு போட்டுட்டு. கட்டுன மனைவியைப் பற்றிக் கூட யோசிக்காம ஒரு மனுஷன் போவாரா இப்படி?” நினைத்து நினைத்து கலங்கி கலங்கி மன உளைச்சலுக்கு ஆளானார் அந்தத்தாய்.

தன் மகளைப் பற்றிய வருத்தமும் வேதனையும் துக்கமும் அவரைப் படுக்கையில் தள்ளியது. காய்ச்சலில் முனங்கிக் கொண்டு படுத்திருக்கிறார். (காய்ச்சல் என்பது ஒரு நோயல்ல அது நோயின் அறிகுறி. உடலுக்குள் வைரஸ் தாக்குதலோ. பாக்டீரியா தாக்குதலோ. மன அழுத்தங்களோ ஏற்படும் போது காய்ச்சல் ஒரு அறிகுறியாய் வெளியே தெரிகிறது). அந்தத் தாயாரின் வீட்டருகே சலசலப்பு “இயேசு வருகிறார். இதோ வந்து விட்டார்” என்று பேச்சுக்குரல்கள் கேட்க அந்தத்தாய் நம்ம பேதுருவின் மாமியார் கண்களை இறுக மூடிக்கொண்டார்.

“இயேசு இங்க வருகிறாரா? இந்த இயேசு தானே என் மகளிடமிருந்து என் மருமகனைப் பிரித்துக் கொண்டு போனார். இப்ப எதுக்கு இங்க வர்றாராம்? நான் இவரப் பார்க்கப் போறதில்லை. கண்களை இன்னும் இறுக்கமாக மூடிக் கொண்டு படுத்திருந்தார். “அம்மா! இங்க பாருங்க… எழுந்து உட்காருங்க” கனிந்த அந்தக்குரலில்… மென்மையான அவரின் தொடுதலில் கிடைத்த ஆற்றல். மன ஆறுதல் … இதை எப்படி புரிந்து கொள்வது. எழுந்து உட்கார்ந்த பேதுருவின் மாமியார் இயேசுவின் அன்பான பரிவு நிறைந்த தெய்வீக முகத்தைப் பார்த்தார். இவருக்காக எதையும் செய்யலாம் என்று வயதான எனக்கே தோன்றுகிறதே! இவரின் வார்த்தைக்காக எதையும் விட்டுவிடலாம் என்று தோன்றுகிறதே! இவருக்கு முன்னால் இந்த உலகமே ஒன்றுமில்லை என்று தோன்றுகிறதே! இதுதானா ! இதுதான் என் மருமகன் பேதுருவை அனைத்தையும் விட்டுவிட்டு அவர் பின்னால் போக வைத்ததோ. போகட்டும். இந்த இயேசு என்ன சொல்கிறாரோ அதைச் செய்யட்டும். இயேசுவின் பணியை என் மருமகன் செய்தால் என் மகளின் வீட்டைக் காக்கும் பணியை நான் செய்து விட்டு போகிறேன். அதுவும் அவர் பணி தானே. புதிய துடிப்புடன் எழுந்த அந்தத்தாய் முனைப்புடன் பணியற்றலானார் (இது ஒரு கற்பனைதான். என்றாலும்… இந்த கோணத்திலிருந்தும் சிந்திக்கலாம் என்று தோன்றுகிறது )

இம்மாத சிந்தனையாக மாமியார் - மருமகள் இவர்களின் வாழ்வியல் நிலைப்பாடு எப்படி இருந்தால் சரியாக இருக்கும்? எவ்வாறு இருக்கலாகாது? உறவு என்ற மண் பாத்திரம் உடைபடுவது எதனால்? உடைத்தவர்கள் யாராய் இருந்தாலும் உடைந்தது உடைந்தது தானே? சற்றே நம் சிந்தனையை இத்தகைய உயரிய உறவுகளை நோக்கி திரும்பிப் பார்ப்போம். நமது விவிலிய மாந்தர்கள் நமக்கு இக்கட்டுரை முழுவதும் வந்து வந்து போகட்டும். இறைவார்த்தைகள் கட்டுரைக்கு உயிர் அளிக்கட்டும்.

**மூன்மாதிரிகை மாமியார் - மருமகள் :**

ரூத்து நூலில் வரும் நகோமியும் ரூத்தும் அந்தக் காலத்திலேயே ஒரு தனித்த சிறப்பாம்சம் உள்ளவர்களாய் உயர்ந்து நிற்பது வியப்பான ஒன்று. "நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல. பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்" (பிலி 2:4) என்ற தூய பவுலடியாரின் வார்த்தையை தங்கள் வாழ்வின் சாராம்சமாகக் கொண்டு குடும்ப ஆன்மீகத்தைக் கட்டி எழுப்பியவர்கள் தான் நகோமியும் ரூத்துவும். குடும்பம் என்ற குட்டி திருஅவையில் தலைவர்களாகிய கணவரும் இல்லை மகன்களும் இல்லாத நிலையில் விவேகமான மாமியாராய் நகோமியும், மனம் கனிந்த அன்பு நிறைந்த மருமகளாய் ரூத்துவும் வாழ்ந்த வாழ்வு அனைவருக்கு சிறந்த படிப்பினையாகும்.

மகளுக்கு மாற்றாக மறுவுருவாக வரக்கூடிய மருமகளை மகளாவே ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் உள்ளவர்களால்தான் தன் மகன் இல்லாத நிலையை நீக்கக் கூடியவரை, தன் மருமகளுக்கு துணைவராகத் தேடிக் கொடுத்து வாழ வைக்க முடியும். அந்த வகையில் பரந்துபட்ட மனப்பான்மையுடன் செயல்பட்ட நகோமி ஒரு கம்பீரமான பெண்மணியாய் உயர்ந்து நிற்கிறார்.

மருமக்களை அவர்களின் தாய்வீட்டிற்குப் பிரிந்து போகச் சொல்லும்போது கூட ஆசீர்வாதமான வார்த்தைக் கூறி வாழ்த்தி வழியனுப்ப பார்த்தார் நகோமி. தனக்கு பின்னும் அவர்கள் வாழ்வு பெற வேண்டும் சிறப்புற வாழ வேண்டும், பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்று நினைக்கும் அவரின் மனப்பாங்கு சிறப்பானது.

தன்னையே ஆதாரமாக்கிக் கொண்ட தன் மருமகள் ரூத்துவை அவர் வழிநடத்திய பாங்கும் அவருக்கென்று திருமண வாழ்வை அமைத்துக் கொடுத்த அன்பும் மிகப்பெரிது. "உன் மீது அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" என்ற நம் கடவுளின் வார்த்தையை வாழ்வாக்கியர் நகோமி. எந்த ஒரு மாமியாராலும் ஏற்க முடியாத ஒரு திருமணத்தைத் தன் மருமகளுக்கு நடத்திப் பார்த்து அழகு பார்த்தவர். பொதுவாக இவ்வாறு சமூகத்தில் ஒரு திருமணம் நடந்தால் மூன்றாம் நாக்கு (புறணி) தான் செயல்பட ஆரம்பிக்கும். ஆனால் நகோமியின் நல்லியல்பு அனைவரும் அறிந்திருந்ததால் அவரைப் புகழ்கின்றனர். மருமகளின் பிள்ளையைப் பேணி வளர்க்கும் தாய் என்று ஊர்ப்பெண்கள் போற்றுகின்றனர். இந்த அரிய பேறு பெற்றவர் நகோமி என்ற இரும்பு பெண்.

பின்னடைவுகளையும், ஏமாற்றங்களையும், வலிகளையும் பின்னுக்குத் தள்ளி ஓரங்கட்டப்பட்ட விதவைப் பெண்ணை உயர்த்திப் பார்த்த விசால பார்வைக் குரியவராய் நம் மனதில் உயர்ந்து நிற்கிறார். மூத்தோரின் அறிவுரைகள் அனுபவங்களிலிருந்து அடுத்த தலைமுறையினர் கற்றுக்கொள்ளும்படி இறைவார்த்தைகள் நமக்கு வெளிச்சம் காட்டுகிறது "நரை திரண்டவருக்கு முன் எழுந்து நில்", "மூப்பர்களின் தோழமையை நாடு: ஞானிகள் யார் எனக் கண்டு அவர்களைச் சார்ந்து நில்" ( சீரா 6:34,35) என்கிறது ஞானநூல். "ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குத் தரப்படுகிற ஞானத்தை பெறுவதற்கு திறந்த மனநிலையே முக்கியமாகும்" என்கிறார் நம் முதுபெரும் திருத்தந்தை அவர்கள் .

ரூத்து... இள வயது விதவைப்பெண். தன் தாய்தந்தையோடு போய் இருக்க வேண்டும் என்று நினைக்காமல் சொந்த நாட்டிற்கு திரும்பி சென்ற தன் மாமியாரோடு ஒட்டிக் கொண்டு "உங்கள் வீடுதான் என் வீடு, உங்கள் இனமே என் இனம், உங்கள் தெய்வம்தான் எனக்கும் தெய்வம்" என்று சொன்னது மட்டுமல்லாமல் ஒருபடி மேலே போய் "நீர் எங்கே இறப்பீரோ நானும் அங்கேயே இறப்பேன்" என்றார். அவரின் அன்பும் கரிசனையும் நமக்கு சிலிர்ப்பை தருகிறது.

உண்மையாய் கணவரை அன்பு செய்யும் மருமக்கள் தான் அவரைப் பெற்றவரையும் அன்பு செய்வர். அப்பத்தின் வீடாம் பெத்லகேம் வந்த பின் தனது மாமியாருக்காக உழைக்க தானே முன்வருகிறார். அவரின் அறிவுரை கேட்டு அதன்படி நடக்கிறார். தனக்குக் கிடைத்த உணவைக்கூட தானே உண்டு விடாமல் தன் மாமியாருக்கு கொண்டு வந்து கொடுக்கிறார். "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத் 7:12) இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறும் பொன்விதியை வாழ்ந்து காட்டிய மாதர்கள் இவர்கள்.

அவர்களின் பேச்சில் தொனிக்கும் கனிவும், மனதில் பொதிந்து வைத்திருக்கும் அக்கறையும், நம்பிக்கையும் இறை ஆசீர்வாதமாக விளைகிறது. மாமியார் நேர்மறையான, ஆசீர்வாதமான வார்த்தைகளை கூறி மருமகளை வழிநடத்துவதும் மருமகள் அவரின் பேச்சை கேட்டு அதன்படி விலகாமல் நடந்ததும் அன்பு நிறைந்த அந்த இல்லத்திற்கு இறை அருளை அள்ளி வழங்கியது.

இவர்களின் அன்பான முன்மாதிரிகை வாழ்வியலால் இயேசுவின் மூதாதையரின் பட்டியலில் ரூத்து பெற்றார் என்பது தனிச்சிறப்பாகும். முதுமையின் அனுபவமும் இளமையின் துறுதுறுப்பும் கைகோர்த்தால் அங்கே சாதனைகள் நிச்சயமே. "வேர்களைப் பற்றி கரிசனை கொண்டிருங்கள். ஏனெனில வேர்களிலிருந்து தான் நீங்கள் வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிதருவற்கான வலிமை கிடைக்கிறது" என்று தன் எழுத்துக்களில் இளமையையும் தோற்றத்திலும் வயதிலும் முதுமையையும் கொண்டிருக்கும் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

நகோமி தன் மருமகளின் மறுவாழ்விற்காக தேர்ந்தெடுத்த போவாஸ் பற்றி சுருக்கமாக சொல்வதென்றால் "ஊசியின் காதில் நுழைந்த ஒட்டகம் 'அவர், செல்வந்தராய் இருந்த போதிலும் ஏழைகள், விதவைகள் மேல் மிகுந்த கனிவும் இரக்கமும் உடையவராய் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்தவர் என்ற விதத்தில் யூபிலி ஆண்டின் இரக்கச்செயல்கள் இவரில் மிளிர்வதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**இன்றைய காலகட்டத்தில்** ... :

"பாதர் தயவு செய்து நற்செய்தி வாசகத்தை மாற்றுங்கள், இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் ... " இதற்குப்பதில் "கொடி திராட்சைச் செடியோடு இணைந்திருப்பது போல ..." என்று வரும் நற்செய்திப் பகுதியை வாசிங்க பாதர் 'மாமியாராகப் போகும் ஒரு பெண்ணின் கோரிக்கை, எங்கே பயம், கலக்கம் தொடங்குகிறது பாருங்கள். "உங்கள் வலதுகைகளை சேர்த்துப் பிடியுங்கள்" என்று குருவானவர் சொல்லும்போது பாசத்தைப் பங்கு போட வந்தது போல மணமகளை பார்க்கும் மாமியார்கள் பலர் உண்டு.

பெண்பார்க்க வரும் போது பெண்ணைக் கேள்வி கேட்ட காலம் மலையேறிவிட்டது. இப்போது பெண்கள் தான் பல கண்டிஷன்கள் போடுகிறார்கள். மாதம் பிறந்தால் சம்பளப் பணம் முழுதும் என் கையில் வந்து விட வேண்டும். திருமணத்திற்குப்பின் மாமியார், மாமனார், கொழுந்தன், மச்சான், மைத்துனி என்று யாரும் கிட்டே வரக் கூடாது. நான் விரும்பும் போதெல்லாம் வெளியே கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை அடுக்கிக் கொண்டு போகின்றனர். காலத்தின் கட்டாயம், நுகர்வு வெறி கலாச்சாரம், இணைய தள, சமூக வலைத்தள ஈர்ப்புகள் மக்களின் மனவளத்தை கெடுத்து கொண்டிருக்கிறது.

திருமணம் என்ற அருட்சாதனத்தின் வழியாக கணவன் - மனைவி மட்டும் இணைவதில்லை. இரு குடும்ப உறவுகள் இணைகின்றன. பாசத்தின் வேர்கள் பரவி பரந்து ஆலமரமாய் விரிவடைகிறது. நம் கடவுள் இதைத்தான் விரும்புகிறார். அன்பின் வழியாக வாழ்வைக் கொண்டு செலுத்தும் குடும்பமாக வாழவே அழைப்பு

விடுத்திருக்கிறார். மாமியார் மருமகளையும் மருமகள் மாமியாரையும் "மனத்தாழ்மையோடு மற்றவர்களை நம்மிலும் உயர்ந்தவராக கருதுவது" (பிலி 2:3) என்ற மனநிலை உருவாகுமானால் ரூத்துக்களையும் நகோமிகளையும் நம் வாழும் சமுதாயத்தில் காண முடியும். அத்தகைய ஆரோக்கியமான மனநிலை கொண்ட குடும்பங்கள் கட்டி எழுப்பப்பட செபிப்போம், செயலாற்றுவோம்.

உறவுகள் தரும் மகிழ்விற்கு ஈடு இணையே இல்லை. அதே நேரம் உறவுகள் தரும் வலிகளுக்கும் ஈடு இணையே இல்லை. எல்லா நிலைகளிலும் இறைவனை மையமாக்கி அவரின் வார்த்தைகளால் வலிமை பெற்று திடம் அடைந்து துன்பத்தில் தளராமனதுடனும், இன்பத்தில் பக்குவமான நிதானத்துடனும் வாழ பழகிவிட்டால் உடைபடா உறவுகள் உத்திரவாதமே. " இருளிலிருந்து ஒளி தோன்றுக! என்று சொன்ன கடவுள் உள்ளங்களில் ஒளியை வீசச் செய்தார். அது கிறிஸ்துவின் திருமுகத்தில் வீசும் கடவுளின் மாட்சியாகிய அறிவொளியே. இந்த செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற (நாம்) நாங்கள் கொண்டிருக்கிறோம்" (2கொரி 4: 6,7) அந்த ஞான ஒளியால் உறவுகள் உடைபடாமல் பார்த்து கொள்வது அத்தியாவசியமாகிறது. இனிவரும் காலத்தில் மாமா - அத்தை, அண்ணன் - தம்பி, அக்கா - தங்கை, சித்தப்பா -சித்தி, பெரியம்மா - பெரியப்பா , மச்சான் - கொழுந்தன் என்ற உறவுகள் காணாமல் போய்விடலாம் வீட்டிற்கு ஒரு . என்பது கூட இல்லாமல் போகலாம். இருக்கும் உறவுகளைப் பேணி பாதுகாக்கவும், உறவுகள் மேம்படவும் நமது நற்செய்திப்பணி துணை செய்யட்டும். 'உளங்கனிந்த அன்புடன் பிறர் நம்மை விட மதிப்பிற்குரியவரென எண்ணும்' (உரோ 12:10) மனநிலை பரவ எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுவோம்.

நற்பணி **ஜெஸி. P.**

## செப்டம்பர் 2024 — வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 01 | புளியால் 97874 91588 | நற்பணி A. சகாயராஜா 94435 09152 |
| 2. | 01 | சருகணி 9442959569 | நற்பணி J. ஆரோக்கியசாமி 82488 99247 |
| 3. | 01 | தேவகோட்டை 90958 66732 | நற்பணி S. சகாயராணி 94422 54152 |
| 4. | 01 | ஆவுடைபொய்கை 84897 03006 | நற்பணி M. சேவியர் 70104 07853 |
| 5. | 01 | இராஜசிங்க மங்கலம் 98437 52061 | நற்பணி L. ஜோசப் இருதயம் 99431 65532 |
| 6. | 08 | சாயல்குடி 63831 52402 | நற்பணி A. சகாயராஜா 94435 09152 |
| 7. | 08 | மானாமதுரை 99443 86477 | நற்பணி M. மரிய கிரகோரி 94869 65799 |
| 8. | 21 | தங்கச்சிமடம் 95859 98444 | நற்பணி A. சகாயராஜா 94435 09152 |
| 9. | 21 | இராமேஸ்வரம் 90479 98614 | செயலர் 97879 67272 |
| 10. | 21 | பாம்பன் 97906 05049 | நற்பணி A. தனிநாயகம் 94860 37889 |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 01.09.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் செயலர் |
| 01.09.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 07.09.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி J. ரெபேக்கா |
| 08.09.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா<br>நற்பணி S. வில்லியம் |
| 08.09.24 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி G. மிக்கேல் பிரபாகர்<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ் செயலர் |
| 15.09.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 15.09.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி |
| 15.09.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி A. யூஜின் அமலராஜ்<br>நற்பணி A. சந்திர புஷ்பா |
| 22.0924 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி S. தைனஸ்மேரி<br>நற்பணி A. ஜான்சி மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

**அடுத்தவர் தவறு செய்யும்போது அதை மன்னிக்க வலிமை வேண்டும்.**
**நாம் தவறு செய்யும்போது மன்னிப்புக் கேட்க அதைவிட வலிமை வேண்டும்.**
**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும். (கொலோசையர் 3:13)

# செப்டம்பர் 2024 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி காளையார்கோவில். |
| 01. | திண்டுக்கல் மறைமாவட்ட நற்செய்திப் பணியாளர்கள் கலந்துரையாடல் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 01 | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால், சருகணி, ஆவுடைபொய்கை, தேவகோட்டை, R.S.மங்கலம் வட்டாரங்கள் |
| 04 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 06 | முழு இரவு செபம் | மகிண்டி மிக்கேல்பட்டணம் |
| 07 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 07. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் |
| 07. | நற்பணி பிரான்சிஸ் ஜெயா இல்லத் திருமண விழா | மானாமதுரை |
| 07. | புனித அன்னாள் சபை சகோ-தரிகள் நற்செய்தி அறிவிப்புப் பணி கருத்தமர்வு | திருச்சி |
| 08. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில் இராமநாதபுரம் வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை |
| 08 | வட்டாத் தியானக் கூட்டம் | மனாமதுரை, சாயல்குடி வட்டாரங்கள் |
| 08. | தொடர் களப்பணி | சாயல்குடி பங்கு மேல முந்தல் |
| 13,14&15 | ஆண்டுத் தியானம் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 15 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித அருளானந்தர் திருத்தலம். அமல அன்னை அமைதியகம். புனித ஆரோக்கிய அன்னை கோவில் சாயல்குடி |
| 20,21 & 22 | ஆண்டுத் தியானம் | அமல அன்னை அமைதியகம், காயாவயல். |
| 21. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பாம்பன் வட்டாரங்கள் |
| 22. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூயஆவியார் கோவில், R.S.மங்கலம் |
| 22 | தொடர் களப்பணி | அஞ்சுக்கோட்டை, இருதயபுரம் பங்குகள் |
| 27&28 | அர்ப்பணம் ஏற்போருக்கான தெளிந்த தேர்தல் தியானம் | அருள்சான்று நிலையம் |
| 28. | நற்பணி சேவியர் நற்பணி சாந்தி இல்ல திருமண அருளடையாள உறுதிப்படுத்தும் விழா | மனாமதுரை |
| 29. | அர்ப்பண விழா | குழந்தை இயேசு ஆலயம், T. சூசையப்பர் பட்டணம் |

# இறையரசின் மக்களாவோம்

வாழ்க்கையில் இறைவனுடைய விருப்பப்படியும் தூய ஆவியாரின் கட்டுப் பாட்டிலும் வாழும் போது நாம் இறையரசின் உறுப்பினர்களாகிறோம். இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் விண்ணரசில் தந்தையுடன் நிரந்தரமாக வாழ வேண்டுமெனில், இவ்வுலக வாழ்க்கை தூய ஆவியார் காட்டும் நிறைவும் கட்டுப்பாடும் தேவை. உலக வாழ்க்கையானது இறையரசு அனுபவமாக மாறும்போது விண்ணரசில் நுழைவது எளிது.

இங்கே உடலும் உலகை ஆசாபாசங்களும் இவ்வுலக ஈர்ப்புகளும் நம்மை கட்டுப் படுத்தாமல் இறைவனின் தூய ஆவியார் நம்மை கட்டுப்படுத்தினால் நம் வாழ்க்கை இறைவனுடன் இணைந்ததாக இருக்கும். சேற்றில் வேரூன்றி சேற்று நீரில் தலை உயர்த்தி நிற்கும் தாமரை இலையில் சேற்று நீரின் கறைகள் படியாததது போல் இரையரசின் பிள்ளைகளிடம் இவ்வுலக வாழ்க்கையின் கறைகள் படியாது.

இறையரசு அனுபவம் விண்ணரசில் நுழைவதற்கான தகுதியை வழங்குகிறது. இறையரசு அனுபவம் இறைவனோடு இணைந்திருப்பதில் மலர்கிறது. இறைவனுடன் இணைய நாம் என்ன செய் வேண்டும்? முதன் முதலில் நாம் தந்தையை அறிய வேண்டும்.

இயேசுவை அறிவோர் தந்தையையும் அறிவர். "நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்" (யோவாள் 14) "என்னைக் காண்பவரும் என்னை அனுப்பியவரையே காண்கிறார்" (யோவா 12:45) "என்னை ஏற்றுக் கொள்கிறவர் என் தந்தையை ஏற்றுக் கொள்கிறார்" (யோவா 13:20).

இயேசுவைக் காணவும் அவர் கூறுவதை கேட்கவும் அவரை நம்பவும், அவரை ஏற்றுக் கொள்ளவும் செய்யும் போது மூவொரு இறைவன் ஒருவரில் வாழ்கிறார் (யோவா 14:23). மேலும், இறையரசின் குழந்தைகள் இயேசுவிடம் அன்பு செலுத்த வேண்டும் அதாவது அவரது கட்டகளைகளை ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டும் (யோவா 14:2) "நீங்கள் என் கட்டளைகளைக் கடைப் பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்" (யோவா 15:10). அவருடைய கட்டளை "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும்" (யோவா 15:12) என்பதே. எனவே கடவுளோடு இணைந்த வாழ்வைப் பெற்று இவ்வுலகில் இறையரசின் பிள்ளகைளாக வாழ்வோம்; அதனால் விண்ணக வாழ்வை உரிமையாக்கிக் கொள்வோம்.

நற்பணி V.**செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை பங்கு.

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| பிற இனத்தினர் நடுவில் நன்னடத்தை உடையவராய் இருங்கள். அவர்கள் உங்களைத் தீயவர்கள் என்று பழித்துரைப்பினும், உங்கள் நற்செயல்களைக் கண்டு, கடவுள் சந்திக்க வரும் நாளில் அவரைப் போற்றிப் புகழ்வார்கள். | **1 பேதுரு 2:12** |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்**

www.arulchandrunilayam.org



கடந்த மாதத்தில் நமது இலக்குகளை அடைய நேர்மறையான உறுதிமொழிகளை எழுதி அதை ஒவ்வொரு சூழலுக்கு ஏற்ற வண்ணம் சொல்லிக் கொள்வது பற்றி பார்த்தோம். அதை தொடர்ந்து சில உறுதிமொழிகளை பார்ப்போம்.

**6. 'துன்பத்திலிருந்து, நான் மீண்டு வருகிறேன், மேலும் வலுவாக மீண்டு வருவேன்.'**

துன்பங்களை எதிர்கொள்வதில் பின்னடைவை உறுதிப்படுத்துவது வளர்ச்சி மனப்பான்மையை வளர்க்கிறது. சவால்களை சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஊக்குவிக்கிறது. மனச்சோர்வின் தாக்கத்தை குறைக்கிறது .

**ஒரு பின்னடைவுக்குப் பிறகு :** ஒரு பின்னடைவுக்குப் பிறகு இந்த உறுதிமொழியை உச்சரிப்பது ஒரு பின்னடைவு உணர்வைத் தூண்டுகிறது. சவால்களை எதிர்கொள்வதில் நேர்மறையான செயலை ஊக்குவிக்கிறது.

**கடினமான செயல்திட்டத்தின் போது:** சவாலான திட்டத்தில் பணிபுரியும் போது இந்த உறுதிமொழியை மீண்டும் செய்வது. விடாமுயற்சியையும் வளர்ச்சி மனப்பான்மையையும் ஊக்குவிக்கிறது. ஒரு ஏமாற்றத்திற்குப் பிறகு: ஒரு ஏமாற்றத்திற்குப் பிறகு இந்த உறுதிமொழியைச் சொல்வது தனிப்பட்ட வலிமையின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துகிறது. உணர்ச்சி மீட்சிக்கு உதவுகிறது.

**7. 'நான் அன்பு,வெற்றி மற்றும் மகிழ்ச்சிக்கு தகுதியானவன்.'**

சுய மதிப்பு மற்றும் நேர்மறையான அனுபவங்களின் தகுதியை அங்கீகரிப்பது சுய அன்பு மற்றும் மனநிறைவின் அடித்தளத்தை உருவாக்க உதவுகிறது. கவலை மற்றும் மனச்சோர்வின் உணர்வுகளைக் குறைக்கிறது.

**காலைப் பிரதிபலிப்பு:** இந்த உறுதிமொழியுடன் நாளைத் தொடங்குவது நேர்மறையான தொனியை அமைக்கிறது. சுய அன்பை வளர்க்கிறது மற்றும் நேர்மறையான அனுபவங்களை ஈர்க்கிறது.

**சமூக தொடர்புகள்:** சமூகமயமாக்கும் முன் இந்த உறுதிமொழியை மீண்டும் மீண்டும் செய்வது சுய மதிப்பு உணர்வுகளை வலுப்படுத்துகிறது. சமூக சூழ்நிலைகளில் நம்பிக்கையை அதிகரிக்கிறது.

**மாலை நேர சுய-கவனிப்பு:** சுய-கவனிப்பு வழக்கத்தின் போது இந்த உறுதிமொழியானது தகுதியான உணர்வை ஊக்குவிக்கிறது. ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு பங்களிக்கிறது.

**8. 'நான் என்னை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன், மேலும் முழுமைக்கான தேவையை நான் விடுவிக்கிறேன்.'**

இந்த உறுதிமொழியானது சுய-ஏற்றுக்கொள்ளுதலை ஊக்குவிக்கிறது மற்றும் நம்பத்தகாத எதிர்பார்ப்புகளை வெளியிடுகிறது. பரிபூரணவாதத்தின் அழுத்தங்களைக் குறைப்பதன் மூலம் ஆரோக்கியமான மன நிலையை ஊக்குவிக்கிறது.

**விளக்கக்காட்சிக்கு முன்:** விளக்கக்காட்சிக்கு முன் இந்த உறுதிமொழியைச் சொல்வது செயல்திறன் அழுத்தத்தைக் குறைக்கிறது. நம்பகத்தன்மையை ஊக்குவிக்கிறது.

**சமைக்கும் போது:** சமையல் போன்ற அன்றாடப் பணிகளின் போது இந்த உறுதிமொழியை திரும்பத் திரும்பச் சொல்வது வழக்கமான நடவடிக்கைகளுக்கு மத்தியில் சுய-அங்கீகாரத்தை வளர்க்கிறது.

**9. 'வாழ்க்கையின் செயல்பாட்டில் நான் நம்பிக்கை கொள்கிறேன் மற்றும் நிச்சயமற்ற தன்மையை தைரியத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்.'**

வாழ்க்கையின் வெளிவரும் பயணத்தில் நம்பிக்கை வைப்பதும், நிச்சயமற்ற நிலையை தைரியத்துடன் எதிர்கொள்வதும், தகவமைப்பு மற்றும் பின்னடைவு உணர்வைத் தூண்டுவதன் மூலம் கவலையின் பிடியைக் குறைக்கிறது.

**வேலை நேர்காணல் :** வேலை நேர்காணலுக்கு முன் இந்த உறுதிமொழியைச் சொல்வது தைரியத்தைத் தூண்டுகிறது மற்றும் முடிவின் நிச்சயமற்ற தன்மை தொடர்பான கவலையைத் தணிக்கிறது.

**புதிய இடங்களுக்குப் பயணம் செய்தல்:** பயணத்தின் போது இந்த உறுதிமொழியைத் திரும்பத் திரும்பச் சொல்வது, தெரியாதவற்றைத் தழுவி, தகவமைப்புத் திறனை வளர்க்கும்.

**மாற்றத்தை வழிசெலுத்துதல்:** மாற்றத்தின் போது இந்த உறுதிமொழியை இணைப்பது வெளிவரும் பயணத்தின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துகிறது, எதிர்காலத்தைப் பற்றிய கவலையைக் குறைக்கிறது.

10. **'குழப்பங்களுக்கு மத்தியில் அமைதியைக் கண்டறிவதன் மூலம், நான் என் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறேன்.'**

எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளின் மீது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவது, சவாலான சூழ்நிலைகளில் கூட உள் அமைதியைக் கண்டறியும் திறனை வலுப்படுத்துகிறது, கவலை மற்றும் மனச்சோர்வின் தாக்கத்தை குறைக்கிறது.

**ஒரு மோதலின் போது :** மோதல் சூழ்நிலையின் போது இந்த உறுதிமொழியை கூறுவது உணர்ச்சிபூர்வமான பதில்களின் மீதான கட்டுப்பாட்டை வலுப்படுத்துகிறது, அமைதியான மற்றும் அளவிடப்பட்ட அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.

**குடும்பக் கூட்டம்:** குடும்பக் கூட்டத்திற்கு முன் இந்த உறுதிமொழியைச் சொல்வது சாத்தியமான குழப்பங்களுக்கு மத்தியில் உணர்ச்சி சமநிலையை பராமரிக்க உதவுகிறது.

**ஒரு காலக்கெடுவிற்கு முன் :** இறுக்கமான காலக்கெடுவிற்கு முன் இந்த உறுதிமொழியை மீண்டும் செய்வது, எண்ணங்களின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது, கவனம் செலுத்துகிறது மற்றும் பயனுள்ள முடிவெடுப்பதை ஊக்குவிக்கிறது.

ஆறாவது பயிற்சி காட்சிப் பலகையில் இருப்பதை காட்சிப் படுத்தி பார்க்கும் பயிற்சியை செய்தல் பற்றி தொடர்ந்து பார்க்கலாம்.

நமத காட்சி பலகையில் 3 நீண்ட கால இலக்குகளும், 12 குறுகிய கால இலக்குகளும் காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்றை எடுத்துக்கொண்டு அந்த இலக்கு நடந்து முடிந்ததாக கற்பனை செய்து கொண்டு செய்ய தொடங்க வேண்டும்.

இந்த பயிற்சி முறையை ஆழ்மன சக்தியை எழுப்பும் சில்வர் மைண்ட் மெடிடேசன் என்று உளவியல் பயிற்சியாளர்கள் அழைக்கின்றனர்.

கண்களை மூடி, ஒரு அமைதியான இடத்தில் அமர்ந்துகொண்டு, ஆழ்மனதை தூண்டும் விதமாக ஆள்காட்டி விரலையும் பெரு விரலையும் ஒன்றாக இணைத்து மற்ற மூன்று விரல்களையும் ஒன்றாக இணைத்து அமர வேண்டும். உடலையும் மனதையும் தளர்வாக வைத்தக்கொண்டு நாம் நமது காட்சிப்பலைகயில் இருந்த தேர்ந்து எடுத்துக்கொண்ட நீண்டகால அல்லது குறுகிய கால இலக்கை கற்பனையில் அதை அடைய மெதுவாக எடுக்கும் முயற்சிகள், பயிற்சிகள் அகியவற்றை பார்த்து பின்னர் அதை அடைந்து விட்ட பெருமிதத்தடன் மெதுவாக கண்களை திறந்து இலக்கை அடைந்துவிட்ட பெருமிதத்தை உணர்வோம். இதே மனநிலையில் அன்றை வேலையை தொடங்குவோம்.

**அசைபோட அரை நிமிடம்:**

"நமது ஆழ்மன சக்தியேஇ நமது இலக்கை அடைய உதவும் மாவீரன் ஆகும்".

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# புனித பாத்ரே பியோ



புனித பியோ இத்தாலி நாட்டில் நேப்பிள்ஸ் நகரில் பியெற்றெல்ஸினா என்ற சிற்றூரில். 1887-ஆம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாள் பிறந்தார். இவர் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் 16-ஆம் வயதில் கப்புச்சின் துறவற சபையில் இணைந்தார். 23-ம் வயதில் குருவானார்.

குருத்துவ திருப்பொழிவு பெற்ற சிலநாட்களுக்குப் பிறகு. தனது இரண்டு கால்களிலும் உள்ளங்கைகளிலும் சொல்ல முடியாத வேதனையை உணர ஆரம்பித்தார். நாளடைவில் இவர் அனுபவித்தது ஆண்டவரின் திருப்பாடுகளின் நினைவு சின்னங்களா என உறுதி செய்ய இயலவில்லை. ஆண்டவர் சாட்டையினால் அடிக்கப்பட்டதையும் முள்முடி சூடப்பட்டிருந்ததையும் தியானித்த சமயங்களில் எல்லாம் பொறுக்க முடியாத வேதனையை உணர்ந்தார்.

1918-ஆம் ஆண்டு இவரை இரட்டை நிமோனியா காய்ச்சல் தாக்கியது. துறவற சகோதரிகள் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். இவ்வாண்டில் ஆகஸ்ட் 5-ம் நாள் நமதாண்டவரின் திருவிலாக் காயத்தின் நினைவாக இவரது விலாவிலும் வேதனையை உணர ஆரம்பித்தார். தனது வாழ்நாள் முழுவதும் இவ்விலாக் காயத்தினின்று குருதி வெளியேறுவதை உணர்ந்தார். இது தோன்றி ஒரு மாதம் கழித்து தனது கைகளிலும், பாதங்களிலும் இரணங்கள் தோன்றியதை உணர்ந்தார். இந்த இரணங்கள் யாவும் இவர் வாழ்ந்த அரை நூற்றாண்டு காலம் வரை இவரை விட்டு நீங்கவில்லை. வலிகளின் மத்தியில் திருப்பலி நிறைவேற்றுவதை நிறுத்தவில்லை. இவர் அனுபவித்த ஐந்து திருக்காயங்கள் பற்றிய செய்தி உலகமெங்கும் நெருப்பாக பரவியது. மருத்துவர்கள் பரிசோதித்தும் முடிவை வெளிக்கொணர முடியவில்லை. இவர் திருப்பலி நிறைவேற்ற தடை செய்யலாமா என்று ஆராய்ந்தனர். பொதுமக்கள் பலர் இவற்றை எதிர்த்தனர். இவர் ஐந்து காய வரத்தின் பொன்விழாவினை இந்த நன்றித் திருப்பலியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அந்த திருப்பலி வேளையில் ஐந்து காயம் வரம் மறைந்தது. மறுநாள் தந்தை பியோ தனது தூய ஆன்மாவை இறைவனிடம் அர்ப்பணித்தார். மருத்துவர்கள் முயற்சித்து காயங்களை தேடியும் ஏமாற்றம் அடைந்தனர். 2002-ம் ஆண்டு திருத்தந்தை 2-ம் யோவான் பவுல் இவருக்குப் புனிதர் பட்டம் அளித்தார்.

(பல்லாயிரக்கணக்கான எடைந்த உள்ளங்களுக்கு இறைவன் தரும் ஆறுதலை பெற்று தரும் கருவியாய் செயல்பட்டார்).

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## என்னை மன்னியும்

- என் நாவில் உள்ளதேல்லாம் உமது புகழே. நாளெல்லாம் நான் பேசுவது உமது பெருமையே என்பதற்கு மறாறாக பயனற்றவைகளையும் .அழிவதரும் வார்த்தைகளையும் பேசியதை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (திப 71:8)
- பெருஞ்சுமை சுமந்த சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்பதை மறந்து. துன்பம் தாங்கமுடியாத சுமைகள் வரும்போது இறைவன் தரும் இளைப்பாறுதலை நடாமல் உலகம் தரும் இளைப்பாறுதலை தேடி வாழ்ந்ததை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (மத் 11:28).
- ஒன்றைப் பற்றிக் கொண்டிருக்கும்போது அதற்கு மாறானதை கைவிட்டு விடாதீர். நீவிர் கடவுளுக்கு அஞ்சி நடப்பீரானால் அனைத்திலும் வெற்றி பெறுவீர் என்பதை மறந்து கடவுளுக்கு அஞ்சி உண்மையுடனும் நேர்மையுடனும் வாழாமல் ஆணவத்துடன் வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (சஉ 7:28)

நற்பணி S.P. **சவரிமுத்து**. இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- இயற்கையின் அழுகுரலை எல்லோரும் கேட்கவும். அதனைப் பதுகாக்க துணிவுடன் செயல்படவும்.
- காலநிலை மாற்றத்தாலும். சூழ்நிலை பாதிப்பாலும் இன்னலுக்கு உள்ளாகும் சமூகங்களும் உயிரினங்களும் பேரழிவிலிருந்து பாதுகாக்கப்பட.
- ரஷ்யா உக்ரைனிடயே போர் நிறுத்தப்பட்டு அமைதி நிலவ
- இந்தியாவின் மதச்சார்பின்னையும். சனநாயகமும் பேணப்பட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ.
- வயாநாடு பகுதியில் நிலச்சரிவில் பாதிக்கபட்ட்ட குடும்பங்களும். சமூகமும் மீண்டும் கட்டியெழுப்பப்பட
- நற்செய்திப் பணியாளர்களாக அர்பணம் ஏற்க உள்ள பொதுநிலையினர் தங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்து கனி கொடுத்து வாழ.
- பெண் குழந்தைகளின் மாண்பையும். பாதுகாப்பையும் அரசும். சமூகமும் உறுதி செய்ய.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- அன்னை மரியாமீது பக்தி என்ற போர்வையில் செய்யப்படும் மூடப்பழக்க வழக்கங்களைத் தவிர்த்து வாழ்தல்.



புனித பணியாளர்கள் பயிற்சி - சாயல்குடி



புனித பணியாளர்கள் பயிற்சி - பரமக்குடி





புனித பணியாளர்கள் பயிற்சி - காளையார்கோவில்


படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **நீதிமொழிகள் 14,15 & 16 அதிகாரங்களுக்குள்**









தமிழக நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு செயலர்கள் கூட்டம் - எம்மாவூஸ் மையம்





அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை

அருள்சான்று நிலையம்

அமைதியகம்



ஆண்டுத் தியானம்
-III



ஆண்டுத் தியானம்
-II

**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.)
Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com